(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
முதலாம் தவணைப் பரீட்சை - 2023
National Field Work Centre, Thondaimanaru.
1st Term Examination - 2023

NFWC

கணக்கீடு
Accounting

Three Hours | Gr -12 (2024) | 33 | T | I,II

சுட்டெண் :- …………………..

அறிவுறுத்தல்கள்:-

- 01 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவும் நான்கு புள்ளிகளைக் கொண்டது.
- உங்கள் சுட்டெண்ணை மேலே கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டினுள் எழுதுக.
- மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்	
வினாத்தாள் 1 இற்காக	
வினா இல	புள்ளிகள்
01 - 15	
16 - 25	
மொத்தம்	

பகுதி I

01) கணக்கீட்டு வெளியீடான நிதிக்கூற்றுக்களை உருவாக்குவதற்கு அடிப்படைகளாகப் பயன்படுத்துபவைகள்?

1. கணக்கீட்டுக் கொள்கைகள்
2. கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகள்.
3. முதன்மை ஏடுகள்
4. பொருளாதார வளங்கள்
5. பரீட்சை மீதி

(………..)

02) நிதிக் கணக்கீட்டு செயன்முறையின் செயற்பாடுகள் இடம்பெறுகின்ற சரியான ஒழுங்கு வரிசையைத் தெரிவு செய்க?

A – வகைப்படுத்தல். B – பொழிப்பாக்குதல்.
C – பகுப்பாய்வு செய்தல். D – தகவல்களை இனங்கானல்.
E – பதிவு செய்தல்.

1. D B E C B 2. D B A C E 3. D A E B C 4. D E A B C 5. D E A C B

(………..)

03) பின்வருவனவற்றுள் பொருளாதார அரசியல் சூழல் காரணிக்கு உதாரணமாகக் கூறக்கூடிய மாறிகள் எவை?

A - வட்டிவீதம் B – சந்தை நிலமை
C – குடித்தொகை D – கணக்கீட்டு நியமங்கள்
E – விலைமட்டம்

1. A, B, C, D, E 2. A, B, C, D 3. A, C, E 4. A, D, E 5. A, B, E

(………..)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

04) ''கணக்கீட்டு அலகு'' எனப்படுவது?

1. உரிமையாளரில் இருந்து வேறான பொருளாதார அலகு.
2. இலாப நோக்குடைய அல்லது இலாப நோக்கற்ற எந்தவொரு நிறுவனமும்.
3. வரி செலுத்துகின்ற அனைத்து நிறுவனங்களும்.
4. தனிநபர், வணிக அமைப்புக்கள், அரசு போன்ற எந்தவொரு அமைப்பும்.
5. அரச , தனியார், கூட்டுறவு நிறுவனங்கள் மாத்திரம். (………..)

05) இரு பிரிவினர்களிடையே பரிமாற்றம் இடம்பெறாவிடினும் வணிகமொன்றின் சொத்து, பொறுப்பு, உரிமை என்பவற்றில் தாக்கத்தினை ஏற்படுத்துவதும் பணத்தினால் அளவிடக் கூடியவைகள் எவ்வாறு அழைக்கப்படும்?

1. கணக்கீட்டு உள்ளீடுகள்
2. கணக்கீட்டு வெளியீடுகள்
3. கொடுக்கல் வாங்கல்கள்
4. நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள்
5. நிகழ்வுகள் (………..)

06) பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் காட்டப்பட்ட நடவடிக்கைக்கு பொருத்தமானதாக அமைபவை?

சொத்துக்கள் = உரிமையாண்மை + பொறுப்பு

- 20000 = -20000

A - வணிகத்தேவைக்கு பயன்படுத்திய பண்டங்கள்

B - கடன்படுநரிடம் இருந்து உரிமையாளர் தனது சொந்த தேவைக்கு நேரடியாக பெற்ற காசோலை.

C - செலுத்திய மின் கட்டணம்.

1. A, B, C   2. B, C   3. A, C   4. B   5. C (………..)

07) வணிகமொன்றின் 01 ஜனவரி 2023 இல் உள்ள நிலைமை பின்வரும் சமன்பாட்டில் தரப்படுகின்றது.

சொத்துக்கள் = பொறுப்புக்கள் + உரிமையாண்மை

350,000 = 100,000 + 250,000

ஜனவரி முதல் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு,

- செலுத்திய பெறுமதிசேர் வரி ரூ 12000
- உரிமையாளர் சொந்தப் பணத்திலிருந்து செலுத்திய வங்கிக் கடன் தவணைப்பணம் ரூ 25000. (இதனுள் உள்ளடங்கியுள்ள கடன்வட்டி ரூ 5000 ஆகும்.)
- கடன்படுநரிடம் 10% காசுக்கழிவு கழித்து பெறப்பட்ட காசு ரூ 36000 மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களின் பின்னர் வணிகத்தின் தேறிய சொத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு யாது?

1. குறைவு ரூ 1000
2. அதிகரிப்பு ரூ 3600
3. அதிகரிப்பு ரூ 16000
4. குறைவு ரூ 8000
5. குறைவு ரூ 12000 (………..)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

08) நாவிதன் என்பவர் 01 ஜனவரி 2022 இல் தன்னிடம் உள்ள காசு ரூ 250,000 யும், இலங்கை வங்கியில் ரூபா 150,000 கடனையும் பெற்று வணிகம் ஒன்றினை ஆரம்பித்தார். அவ் வணிகத்தின் 31 டிசெம்பர் 2022 ல் உள்ள நிலைமை வருமாறு,
மொத்தச் சொத்துக்கள் 375,000
மொத்தப் பொறுப்புக்கள் 125,000
இவ்வாண்டில் உரிமையாளர் மாதாந்தம் ரூ 2000 வீதம் பற்றினார்.
2022 ம் ஆண்டுக்கான இலாபம் / நட்டம் யாது?
1. இலாபம் ரூ 24,000 2. இலாபம் ரூ 52,000 3. நட்டம் ரூ 50,000
4. இலாபம் ரூ 100,000 5. நட்டம் ரூ 52,000 (………..)

09) வணிகமொன்றின் 2023 மார்ச் மாத வங்கித் தகவல்கள் வருமாறு, காசுக் கட்டுப்பாட்டு கணக்கின் படி வரையப்பட்ட காசோலைகளின் மொத்தத் தொகை ரூ 175,000, மார்ச் மாத வங்கிக் கூற்றில் வரவு வைக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ 140,000 ஆகும். இதனுள் பின்வருவன உள்ளடக்கும்.
- நிலையான கட்டளைக் கொடுப்பனவு - ரூ 7000
- வங்கி அறவிட்ட காசோலைப் புத்தக கட்டணம் - ரூ 1000
31 மார்ச் 2023 இல் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் தொகை யாது?
1. ரூபா 35000 2. ரூபா 43000 3. ரூபா 27000 4. ரூபா 48000 5. ரூபா 33000
(………..)

10) கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்குத் தொடர்பில் பின்வருவனவற்றுள் எது/எவை சரியானதாகும்?
A - கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவதற்கான தகவல்கள் முதன்மை ஏடுகளில் இருந்து பெறப்படுகின்றன.
B - கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு பொதுப்பேரேட்டில் தயாரிக்கப்படும்.
C - கடன் கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் இரட்டைப் பதிவுகள் முறையில் பதிவுகள் செய்யப்படுகின்றன.
D - கடன் கொடுநர் துணைப் பேரேட்டில் பதியப்பட்ட தகவல்களின் மொத்தத் தொகைகள் கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் காணப்படும்.
1. A, B, C, D 2. A, B, C 3. A, B 4. A, B, D 5. A, D (………..)

11) கொள்வனவு நாளேடு தொடர்பில் பின்வருவனவற்றுள் சரியான கூற்றுக்கள் எவை?
A – நடைமுறையல்லாச் சொத்துக்களின் கடன்கொள்வனவு பதியப்படும்.
B – கொள்வனவு நாளேடு ஓர் முதன்மை ஏடாகும்.
C - மீள் விற்பனைக்கான பண்டங்களின் கடன் கொள்வனவு பதியப்படும்.
D – கொள்வனவு நாளேட்டின் பதிவுகளுக்கான மூல ஆவணம் கொள்வனவுப் பட்டியலாகும்.
E – கொள்வனவு நாளேட்டின் கூட்டுத்தொகை கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு மாற்றம்.
1. A, B, C, D, E 2. A, B, C, D 3. A, C, E 4. B, C, D, E 5. B, C, D (………..)

12) வணிகம் ஒன்றின் ஏடுகளில் இருந்து பெறப்பட்ட தகவல்கள் வருமாறு.
ஆரம்ப கடன்படுநர் மீதி ரூபா 45000
கடன் விற்பனை ரூபா 120,000
அனுமதித்த கழிவு ரூபா 7000
கடன்படுநரிடம் பெற்ற காசு ரூபா 87000
கணக்கு பதிவுகளில் ஏற்பட்ட தவறுகள் வருமாறு,
- கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் கொடுத்த கழிவு ரூ 700 எனப்பதியப்பட்டது.
- சேகரிடம் பெற்ற காசு ரூபா 7000 நபர் கணக்கில் வரவில் பதியப்பட்டது.
தவறுகளைத் திருத்த முன் கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி யாது?
1. ரூபா 71000 2. ரூபா 77300 3. ரூபா 97300 4. ரூபா 63300 5. ரூபா 84300
(………..)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

13) சாதனா நிறுவனத்தின் சில்லறைக் காசாளரினால் 2023 மார்ச் மாதத்திற்கு மேற்கொண்ட சில்லறைச் செலவுக் கொடுப்பனவுகள் விபரம் வருமாறு,

எழுது கருவிச் செலவு	ரூ 450
தபால் செலவுகள்	ரூ 600
உபசரிப்புச் செலவுகள்	ரூ 400
சுத்திகரிப்புச் செலவுகள்	ரூ 350
மாலாவுக்கு செலுத்தியது	ரூ 400
மொத்தம்	ரூ 2200

2023 மார்ச் 31 இல் சில்லறைக் காசு மீதி ரூ 800

சாதனா வணிகத்தின் 2023 மார்ச் 01 இல் காணப்பட்ட சில்லறைக் காசு வசக்கட்டின் பெறுமதியும், 2023 ஏப்ரல் 01 இல் சில்லறைக் காசு வசக்கட்டிற்கு மீள் நிரப்பப்பட்ட தொகையும் பின்வருமாறு.

1. ரூ 2200, ரூ 3000   2. ரூ 1400, ரூ 2200   3. ரூ 3000, ரூ 2200
4. ரூ 800, ரூ 2200   5. ரூ 3000, ரூ 800   (………..)

14) ஆதி வணிகம் அமலா வணிகத்திடம் இருந்து ரூ 90,000 பெறுமதியான பண்டங்களை கடனுக்கு கொள்வனவு செய்தது. இதில் ரூபா 10,000 பெறுமதியான பொருட்களை திருப்பி அனுப்பப்பட்டதுடன் செலுத்த வேண்டிய தொகை 10% காசுக் கழிவுடன் தீர்க்கப்பட்டது. ஆதி வணிகத்தின் ஏட்டில் இடம்பெற்ற மூல ஆவணங்களில் சரியானவை.

1. கொள்வனவு பட்டியல், வரவுத்தாள், கொடுப்பனவு கைச்சாத்து.
2. விற்பனை பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு
3. பற்றுச்சீட்டு, செலவுத்தாள், வரவுத்தாள்
4. கொடுப்பனவு உறுதிச் சீட்டு, பற்றுச்சீட்டு, கொள்வனவு பட்டியல்
5. பற்றுச் சீட்டு, செலவுத்தாள், விற்பனைப் பட்டியல்   (………..)

15) சர்மா என்பவர் நிர்மலா நிறுவனத்திடம் பண்டங்களை கொள்வனவு செய்தபோது பட்டியலின் மொத்தம் ரூ 120,000 ஐக் காட்டியது. நிர்மலா கொள்வனவுக்காக 10% வியாபாரக் கழிவினை வழங்கினார். அத்துடன் ஒரு மாத காலத்தினுள் பணம் செலுத்தப்படின் 5 % காசுக்கழிவு அனுமதிக்கப்படும் என பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தது. சர்மா 15 நாட்களில் பணம் செலுத்தியிருப்பின் காசு கொடுப்பனவு நாளேட்டில் பதிய வேண்டிய நிர்மலாவுக்கு கொடுத்த காசுத் தொகை யாது?

1. ரூ 108000   2. ரூ 102600   3. ரூ 5400   4. ரூ 112400   5. ரூ 86400   (………..)

(4 x 15 = 60 புள்ளிகள்)

16) கீழே தரப்பட்டுள்ள அறிக்கைகளானது நிதிகணக்கீட்டின் கூறு ஒன்றா? அல்லது முகாமைக் கணக்கீட்டின் கூறு ஒன்றா? என்பதனைக் குறிப்பிடுக.

கூற்றுக்கள்	நிதி / முகாமை கூறு
A. உரிமையாண்மை மாற்றல் கூற்று	…………………………………………………………
B. வரவு செலவுத் திட்டம்	…………………………………………………………
C. காசுப்பாச்சல் கூற்று	…………………………………………………………
D. மேந்தலைப் பகுப்பாய்வுக் கூற்று	…………………………………………………………

17) வணிகமொன்றில் பின்வரும் அக்கறையுடையோரில் எத்தகையோர் கீழே தரப்பட்டுள்ள தகவலில் அக்கறையுடையவர்களாக இருப்பர்?

1. அரசாங்கம்   2. முதலீட்டாளர்கள்   3. கடனை வழங்குவோர்   4. முகாமையாளர்கள்

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

தகவல்	அக்கறையுடையோர்
A - நீண்ட தவணைக் கடன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான நிறுவனத்தின் இயலுமை.	…………………………………………………
B - முதலிட்ட மூலதனத்துடன் ஒப்பிடுகையில் நிறுவன இலாபத்தன்மை.	…………………………………………………
C - நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படும் பொருளின் கிரயம்.	…………………………………………………
D - நிறுவனமொன்று செலுத்தும் வரியின் அளவு	…………………………………………………

18) விற்பனை நாட்குறிப்பேட்டின் மொத்தம் வருமாறு,

பெறுமானம் (ரூபா)	VAT (ரூபா)	மொத்தப் பெறுமானம் (ரூபா)
120,000	18000	138000

மேற்தரப்பட்ட மொத்தத் தொகைகளை பொதுப்பேரேட்டில் பதிவு செய்வதற்கான நாட்குறிப்பு பதிவுகளை தருக.

……

……

……

19) வியாபார வருமதியாளர் ஒருவரிடம் 10 % காசுக் கழிவினை கழித்துப் பெற்றுக் கொண்ட காசோலை ரூபா 36000 வங்கிக் கணக்கில் வைப்புச் செய்த வங்கியால் மறுக்கப்பட்டது. மேற்குறித்த நடவடிக்கை "முழுவதனையும்" பொதுப் பேரேட்டில் பதிவு செய்வதற்கான நாட்குறிப்பு பதிவினை எழுதுக.

……

……

……

20) பின்வரும் விடயங்களை சீராக்கம் செய்வதனால் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியில் ஏற்படும் தாக்கத்தினைக் குறிப்பிடுக. (✓அடையாளம் இடுக)

வேறுபாடுகளுக்கான காரணங்கள்	தாக்கம்		
	அதிகரிப்பு	குறைவு	மாற்றமில்லை
1. கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்காத காசோலை.			
2. வங்கி அறவிட்ட மேலதிக பற்று வட்டி			
3. வாடிக்கையாளரின் நேரடிவைப்பு.			
4. நிலையான கட்டளைக்கு அமைய வங்கி செலுத்திய காப்புறுதிக் கட்டணம்			

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

21) பூரணி வணிகத்தின் வருமதியாளர் தொடர்பான விபரம் வருமாறு,

1. ஜனவரி 2022 இல் கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ 45000
   2022 ஆம் ஆண்டு வருமதியாளரிடம் பெற்ற காசு ரூ 240000
   2022 ஆம் ஆண்டு வருமதியாளருக்கு அனுமதித்த கழிவு ரூ 12000
   31 டிசெம்பர் 2022 இல் கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ 54000
   2022 ஆம் ஆண்டுக்கான கடன் விற்பனைத் தொகையினை கணிப்பிடுக.

   ……………………………………………………………………………………………………

   ……………………………………………………………………………………………………

❖ **22, 23, 24 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களை பயன்படுத்துக.**

பின்வரும் கொடுக்கல், வாங்கல்கள் அபிரா வணிகத்தின் 2023 மார்ச் மாதத்தில் இடம்பெற்றுள்ளன. இந் நிறுவனத்தின் நிதி வருடம் மார்ச் 31 இல் முடிவடைகின்றது.

1. உரிமையாளரால் ரூபா 500,000 காசு மேலதிக மூலதனமாக ஈடுபடுத்தப்பட்டது.
2. ரூ 100,000 பெறுமதியான மீள்விற்பனைப் பண்டங்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.
3. ரூ 10000 கிரயமான பண்டங்கள் தீயினால் அழிவடைந்துள்ளது.
4. ரூபா 12000 வாடகைச் செலவீனம் ஏற்பட்டுள்ளதுடன் அவை மே மாதம் 2023 இல் செலுத்தப்படவுள்ளது.

22) பின்வரும் கூற்றுக்களில் எக்கூற்று மேலேதரப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல்களின் தாக்கத்தினைக் குறிக்கின்றது.

விளைவு	கொடுக்கல் வாங்கல் (இலக்கத்தினை குறிப்பிடுக)
A. சொத்துக்களில் குறைவும், உரிமையில் குறைவும்	………………………………..
B. பொறுப்புக்களில் அதிகரிப்பும் உரிமையில் குறைவும்	………………………………..
C. சொத்துக்களில் அதிகரிப்பும் உரிமையில் அதிகரிப்பும்	………………………………..
D. சொத்துக்களில் அதிகரிப்பும் பொறுப்புக்களில் அதிகரிப்பும்.	………………………………..

23) மேற்படி ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களையும் பதியப் பயன்படுத்தும் மூலப்பதிவேடுகளைக் குறிப்பிடுக.

கொடுக்கல் வாங்கல்	**மூலப்பதிவேடு**
(1)	…………………………………………………..
(2)	…………………………………………………..
(3)	…………………………………………………..
(4)	…………………………………………………..

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

24) மேலே தரப்பட்ட கொடுக்கல், வாங்கல்கள் பொதுப்பேரேட்டில் எந்தக் கணக்கு வகையின் கீழ் பதியப்படும் என்பதனை (✓) குறியீட்டின் மூலம் குறிப்பிடுக.

கொடுக்கல் வாங்கல்	கணக்கு வகை				
	சொத்து	பொறுப்பு	உரிமை	வருமானம்	செலவீனம்
(1)	…………….	…………….	…………….	…………….	…………….
(2)	…………….	…………….	…………….	…………….	…………….
(3)	…………….	…………….	…………….	…………….	…………….
(4)	…………….	…………….	…………….	…………….	…………….

25) கணக்குப் பதிவின் பின்வரும் வழுக்கள் பரீட்சை மீதியின் எப்பக்கத்தில் குறைவை ஏற்படுத்துமென (✓) அடையாளமிட்டுக் கூறுக?

	வரவு	செலவு
1. செலுத்திய விளம்பரம் காசுக் கணக்கில் மட்டும் பதியப்பட்டது.	…………………………	…………………………
2. கொடுத்த கழிவு கடன்படுநர் கட்டுப்பாட்டு கணக்கில் பதியப்படாமை.	…………………………	…………………………
3. கடன்கொடுநருக்கு செலுத்திய காசு காசுக்கணக்கில் மட்டும் பதியப்பட்டது.	…………………………	…………………………
4. விற்பனைத் திரும்பல் நாளேட்டின் கூட்டுத்தொகை இரு கனக்குகளிலும் வரவில் பதியப்பட்டது.	…………………………	…………………………

(10 x 4 = 40 புள்ளிகள்)

பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

01) அன்புச்சோலை வணிகத்தின் 2023 ஜனவரி மாதத்திற்கான தகவல்கள்.

01.01.2023 இல் காணப்பட்ட மீதிகள்

காசுக் கட்டுப்பாடு	84,000
விநியோக வான்	200,000
சரக்கிருப்பு	46,000
வியாபார வருமதியாளர் கட்டுப்பாடு	30,000
- வீரமணி - 18000	
- சூடாமணி - 12000	
வியாபார சென்மதியாளர் கட்டுப்பாடு	19,000
- கோதை 11000	
- பாவை 8000	
வங்கி கடன்	40,000
மூலதனம்	?

2023 ஜனவரி மாதம் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் வருமாறு,

3.01	காசோலை மூலமான விற்பனை	- ரூ 20,000
5.01	காசோலை மூலமான கொள்வனவு	- ரூ 15,000
7.01	காசோலை மூலம் செலுத்திய விளம்பரம்	- ரூ 4,000
9.01	பெற்ற வாடகை வருமானம்	- ரூ 8,000
10.01	காசோலை மூலம் பற்று	- ரூ 3,000
14.01	வீரமணிக்கு விற்பனை பட்டியல் விலை	- ரூ 20,000

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

(10 % வியாபார கழிவு கழிக்குக)

16.01 வீரமணியின் வருமதித் தொகையில் $\frac{2}{3}$ பங்கு 10 % காசு கழிவு தள்ளி பெறப்பட்டது.

18.01 கோதையிடம் கொள்வனவு பட்டியல் விலை 10,000

(10 % வியாபாரக் கழிவு கழிக்குக)

20.01 கோதைக்கு செலுத்த வேண்டிய சென்மதியில் $\frac{1}{2}$ பகுதி 10 % காசுக் கழிவு தள்ளி காசோலை கொடுக்கப்பட்டது.

24.01 வரையறுத்த ஒளிக்கதிர் கம்பனியிடம் இருந்து ரூ 40,000 பெறுமதியான விநியோக வான் கடனுக்கு வாங்கப்பட்டது.

25.01 பாவையிடம் கொள்வனவு ரூ 12,000

26.01 சூடாமணிக்கு கடன் விற்பனை ரூ 18,000

27.01 வங்கியில் இருந்து பெற்ற கடன் ரூ 10,000

28.01 ஒளிக்கதிர் கம்பனிக்கு பகுதிக் கொடுப்பனவாக ரூ 20,000 காசோலை வழங்கப்பட்டது.

30.01 காசோலை மூலம் செலுத்திய மின் கட்டணம் ரூ 3,000

❖ **வேண்டப்படுவது.**

1. முதன்மை ஏட்டுப் பதிவுகள்
2. பொதுப் பேரேட்டில் தேவையான கணக்குகள்
3. பொதுப் பேரேட்டில் பரீட்சை மீதி (40 புள்ளிகள்)

02) சேரமான் வணிகத்தின் 31.12.2022 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று உருப்படிகள்.

	ரூபா (000 ல்)
தளபாடம் பொருத்துக்கள்	120
சரக்கிருப்பு	70
வியாபார வருமதியாளர்	10
காசுக்கட்டுப்பாடு	30
	230
உரிமையாண்மை	180
கடன்கொடுநர்	50
	230

2023 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் வருமாறு,

1. 04/01 ரூ 40,000 பொருட்கள் காசிற்கு விற்கப்பட்டது. இப் பொருட்களின் விற்பனைக் கிரயம் ரூபா 30,000
2. 08 /01 ரூ 35,000 மீள் விற்பனைப் பொருட்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.
3. 12/01 08.01.2023 இல் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களில் ரூபா 5000 பெறுமதியானவை விநியோகத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டது.
4. 10/01 ரூ 40,000 கிரயமான பண்டங்கள் கிரயத்துடன் 25% இலாபம் கூட்டி கடனுக்கு விற்கப்பட்டது.
5. 18/01 கடன்படுநரிடம் இருந்து ரூ 9,000 காசோலை பெறப்பட்டது. மேலும் ரூ 1000 அறவிட முடியாக் கடனாக பதிவளிக்கப்பட்டது.
6. 20/01 ஜனவரி மாத கட்டிட வாடகையாக ரூபா 12000 செலுத்தப்பட்டது.
7. 25/01 01.01.2023 இல் உள்ள கடன்கொடுநர் மீதியானது ரூ 5000 காசுக்கழிவுடன் கொடுத்து தீர்க்கப்பட்டது.
8. 25/01 உடமையாளர் சொந்தத் தேவைக்கான பற்று ரூ 5000.
9. 30 /01 நானாவித வருமானம் ரூ 1000 காசாக பெறப்பட்டது.
10. 31/01 ஜனவரி மாதம் தளபாடத்துக்கு ரூ 3000 பெறுமானத் தேய்வு செய்யப்பட்டது.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

❖ **வேண்டப்படுவது.**

1. ஆரம்ப மீதிகளை கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டு சமன்பாட்டில் பதிவதுடன் கொடுக்கல் வாங்கல் இலக்கம் 1 – 10 வரையான கொடுக்கல் வாங்கல்கள் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தினை பெறுமானங்களுடன் காட்டுக.

இல. தளபாடம் + சரக்கிருப்பு + வருமதியாளர் + காசு = உரிமையாண்மை + கடன்கொடுநர்

2. 2023 ஜனவரி மாதத்திற்கான வருமானக் கூற்றினை தயாரிக்குக. (20 புள்ளிகள்)

03) அ) அறிவு வணிகத்தின் 2022 டிசெம்பர் மாதத்திற்கான காசுக் கட்டுப்பாட்டு கணக்கின் சுருக்கம் வருமாறு,

காசுக் மீட்டுப்பாட்டுக் கணக்கு			
மீ / வ	50 000	கொடுப்பனவுகள்	1150 000
பெறுவனவுகள்	1250 000	மீ / செ	150 000
	1300 000		1300 000
மீ / வ	150 000		

2022 டிசெம்பர் மாத வணிகத்தின் காசு மீதியும், வங்கிக்கூற்று மீதியும் இணங்கவில்லை. வேறுபாட்டிற்கான காரணங்கள்.

1. வங்கி மேலதிகப் பற்று வட்டி ரூ 15000 வங்கிக் கூற்றில் வரவு வைக்கப்பட்டிருந்தது. இது காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் இடம்பெறவில்லை.
2. நவம்பர், டிசெம்பர் மாதங்களில் வைப்புச் செய்யப்பட்ட காசோலைகள் முறையே 30,000, 40,000 டிசெம்பர் வரை தீர்வையாகவில்லை.
3. செலிங்கோ கம்பனியால் வங்கியில் நேரடியாக வைப்பில் இடப்பட்ட பங்கு லாபம் ரூபா 42000 காசு கணக்கில் பதியப்படவில்லை.
4. நிலையான கட்டளைக்கு அமைய வங்கி செலுத்திய காப்புறுதி தவணைக் கட்டணம் ரூ 14000 காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் இடம்பெறவில்லை.
5. டிசெம்பர் மாதம் இறுதிவரை வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமானம் ரூ 63000.
6. கடன்படுநரான வைதேகியிடம் பெற்ற காசோலை ஒன்று ரூ 18000 வணிகத்தின் காசுக் கணக்கில் பதியாது வங்கியில் இடப்பட்டிருந்தது. இந்தக் காசோலை வங்கிக் கூற்றில் செலவு வைக்கப்பட்டிருந்தது.
7. மின்சாரக் கட்டணத்திற்கு வழங்கிய காசோலை ரூ 12000 தொகையானது காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கிலும், வங்கிக் கூற்றிலும் இடம்பெறவில்லை.

❖ **வேண்டப்படுவது.**

1. சீராக்கிய காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு
2. 2022 டிசெம்பர் மாத வங்கிக் கணக்கிணக்க கூற்று. (10 புள்ளிகள்)

ஆ) தங்க மயில் வணிகத்தின் 2023 ஜனவரி 01 இல் சில்லறைக் காசு மீதி ரூபா 5000 ஆகும். ஜனவரி 01 ஆம் திகதி சில்லறைக்காசு கட்டுநிதி ரூ 30000 ஆகுமாறு ரூ 25000 காசோலையொன்று சில்லறக் காசாளருக்கு வழங்கப்பட்டது. ஜனவரி மாத சில்லறைச் செலவுகளின் கொடுப்பனவு.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

விபரம்.	**ரூபா**
பதிவுத்தபால் கட்டணம்	*1400*
தபாலில் பொதி அனுப்பும் செலவு	*800*
கடிதவுறை	*1250*
சிற்றுண்டிச் செலவு	*1150*
குளிர்பானம்	*1000*
எழுதுகருவி	*1300*
காகிதாதிச் செலவு	*2000*
கூலிக் கொடுப்பனவு	*1300*
சுத்தப்படுத்தல்	*1600*
பூபதி (வழங்குநர்)	*5000*
அமுதன் (விநியோகத்தர்)	*3000*

❖ **வேண்டப்படுவது,**

1. அஞ்சல், உபசரணை, காகிதாதி எழுதுபொருள், ஏனைய செலவு, ஏனைய கொடுப்பனவு, நிரல்களுடன் கூடிய சில்லறைக்காசு கொடுப்பனவு நாளேடு.
2. பொதுச் பேரேட்டில் காணப்படுகின்றவாறான சில்லறைக் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04) அ) ''தமிழ்நிலா'' வணிகத்தின் 2023 ஜனவரி மாதத்திற்கான சில தகவல்கள் வருமாறு,

1. 01 ஜனவரி 2023 ல் உள்ள பொதுப்பேரேட்டில் உள்ள மீதிகள்

மோட்டார் வான்	65000
சரக்கிருப்பு	30000
வியாபார வருமதியாளர்	42000
வியாபார சென்மதியாளர்	33000
காசுக் கட்டுப்பாட்டு கணக்கு	23000
வங்கிக் கடன்	60000
மூலதனம்	67000

2. ரத்தினா மோட்டார் கம்பனியிடம் கடனுக்கு வாங்கிய மோட்டார் வான் ரூபா 125000.
3. தமிழ் அழகி தரவேண்டிய ரூபா 10000 அறவிட முடியாக் கடனாக பதிவளிக்கப்பட்டது. தயாரிக்குக.

பொதுநாட் குறிப்பேட்டில் மேற்படி விடயங்களை பதிவு செய்க.

(விளம்பல் அவசியம்) (10 புள்ளிகள்)

ஆ) உதவும் கரங்கள் வணிகத்தின் 2023 மார்ச் மாதத்துக்கான கடன் விற்பனைகள், மற்றும் விற்பனைத் திரும்பல்கள் பற்றிய தகவல்கள் வருமாறு,

- 02.03.2023 பட்டியல் இலக்கம் 255 பசுமை வணிகத்திற்கு கடன்விற்பனை பட்டியல் விலை ரூ 50,000 வியாபாரக் கழிவு 10 % ஆகும்.
- 10.03.2023 பட்டியல் இலக்கம் 325 அந்திவானம் வணிகத்துக்கு கடன் விற்பனை ரூபா 32000.
- 13.03.2023 செலவுத்தாள் இல 75 அந்திவானம் வணிகம் திருப்பி அனுப்பிய பண்டம் ரூபா 6000
- 15.03.2023 பட்டியல் இலக்கம் 440 வானவில் வணிகத்துக்கு கடன் விற்பனை ரூபா 28000
- 20.03.2023 பட்டியல் இலக்கம் 450 கடலரசி வணிகத்துக்கு கடன் விற்பனை ரூபா 30000
- 30.03.2023 செலவுத்தாள் இல 76 கடலரசி வணிகம் திருப்பிய பண்டங்கள் ரூபா 4000.

அனைத்து விற்பனைகள் மீதும் 15 % VAT சேர்க்கப்படும்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

❖ **வேண்டப்படுவது.**

1. விற்பனை நாளேடு (VAT நிரலுடன்)
2. விற்பனைத் திரும்பல் நாளேடு (VAT நிரலுடன்)
3. பின்வரும் பேரேட்டுக் கணக்ககள்.
   அ) கடன்படுநர் கட்டுப்பாடு
   ஆ) விற்பனை
   இ) விற்பனை திரும்பல்.
   ஈ) VAT கணக்கு (10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05) அ) கவியரசி வணிகத்தின் 2023 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் அட்டவணை மூலம் காட்டப்படுகின்றது.

வருமதியாளர் பெயர்	**01.01.2023 இல் மீதி**	**மொத்த விற்பனை**	**மொத்த விற்பனையில் கடன் விற்பனை**	**உட்திரும்பல்**	**பெற்ற காசு**	**கொடுத்த கழிவு**
இசை அரசன்	20,000	400 000	80 %	30 000	90 000	10 000
இசை நிலா	30,000	500 000	70 %	40 000	180 000	20 000
இசைத் தமிழ்	40,000	600 000	50 %	30 000	180 000	20 000
இளந்தென்றல்	(10,000)	700 000	60 %	20 000	300 000	20 000
	80,000	**2 200 000**		**120 000**	**750 000**	**70 000**

❖ **வேண்டப்படுவது,**

1. பொதுப்பேரேட்டில் கடன்படுநர் கட்டுப்பாட்டு கணக்கு.
2. கடன்படுநர் பேரேட்டில் தனிநபர் கணக்குகளும் அட்டவணை மீதியும். (10 புள்ளிகள்)

ஆ) சுடர்ஒளி வணிகத்தின் பரீட்சை மீதி தயாரித்த போது வரவுப் பக்கத்தில் ரூபா 45000 குறைவு ஏற்பட்டது. பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

1. கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கின் வரவுப் பக்கம் ரூபா 1000 கூட்டப்பட்டது.
2. செலுத்திய சம்பளம் ரூபா 24000 சம்பளக் கணக்கில் ரூபா 42000 எனப் பதியப்பட்டது.
3. காசுக் கொடுப்பனவு நாளேட்டின் காசுக் கொள்வனவு நிரலின் கூட்டுத்தொகை ரூபா 27500 கடன் கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் கடன் கொள்வனவாக பதியப்பட்டது.
4. ரூபா 4500 செலவுத்தாள் ஒன்று கொள்வனவுத் திரும்பல் கணக்கின் செலவில் ஒரு கணக்கில் மட்டும் பதியப்பட்டு இருந்தது.
5. காசுப் பெறுவனவு நாளேட்டில் பாண்டியனுக்கு விட்ட கழிவு ரூபா 4500 கழிவு நிரலில் ரூபா 5400 எனப் பதியப்பட்டது.

❖ **வேண்டப்படுவது,**

1. வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவுகள்.
2. தொங்கல் கணக்கு (10 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

(மொத்தம் 100 புள்ளிகள்)